Dinakaran - 11/2/18

## உலக கோப்பை கிரிக்கெட்

# சவாலை இந்திய அணி சந்திக்கும்

## சச்சின் டெண்டுல்கர் பேச்சு

சென்னை, பிப்.11: உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் எந்த விதமான சவாலையும் சந்தித்து வெற்றி பெறும் திறமை இந்திய அணியிடம் உள்ளது என்று முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் பேசினார்.

தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் கட்டப்பட்டுள்ள லியோ முத்து உள் விளையாட்டு அரங்கு திறப்பு விழா நேற்று நடந்தது. கல்லூரி தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து தலைமை தாங்கினார். விளையாட்டு அரங்கை கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் திறந்து வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது: சென்னை ரசிகர்கள் எனக்கு என்றைக்குமே உற்சாக வரவேற்பு அளிப்பது மிக மகிழ்ச்சியளிக்கிறது.

இந்திய மைதானங்களில் சென்னையில் விளையாடுவது எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. கடந்த 2008ல் சென்னையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணியை வெற்றி பெற 274 ரன்கள் எடுப்பதற்கு சென்னை ரசிகர்களின் உற்சாக ஆதரவே முக்கிய காரணம்.

ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலக கோப்பை கிரிக்கெட் போட்டி, இந்திய அணிக்கு சவாலான ஒன்றாகும். இருந்த போதிலும் இந்த சவாலை சந்திக்கும் திறமை இந்திய அணிக்கு உள்ளது. இந்திய ரசிகர்களின் ஆதரவாலும் பிரார்த்தனையாலும் இந்திய அணி வெற்றி பெறும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இசை கொடர்ந்க.



▶ சாய்ராம் கல்லூரியில் லியோ முத்து உள்விளையாட்டு அரங்கத்தை திறந்து வைத்த சச்சின் டெண்டுல்கருக்கு பூங்கொத்து வழங்குகிறார் சாய் பிரகாஷ் லியோமுத்து. அருகில் அறங்காவலர்கள் கலைச்செல்வி லியோமுத்து, சர்மிளா ராஜா, ரேவதி சாய் பிரகாஷ், பேராசிரியர் மாறன்.

## தோல்வி பற்றி கவலை படக்கூடாது

மாணவ, மாணவிகள் பொறுமை, பண்பு, மனித நேயத்துடன் நல்ல மனிதர்களாக வாழ வேண்டும். தோல்விகளை பற்றி கவலைப்படாமல் நம்பிக்கையுடன் கடினமாக உழைத்தால் தோல்விகளே வெற்றிகளாக மாறும். கடவுள் நமக்கு என்னவெல்லாம் கொடுத்துள்ளார் என்பதை பார்த்து, கடின முயற்சி ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயல்பட்டால் நிச்சயம் வெற்றி பெறலாம்

மாணவ, மாணவிகளுடன் உரையாடிய போது, டெண்டுல்கர் கூறியதாவது, தனக்கு கிரிக்கெட்டில் பிடித்த ஹீரோக்களாக கவாஸ்கரும், விவியன் ரிச்சர்ட்ஸ் உள்ளனர். ஓய்வு பெற்ற பிறகு குடும்பத்தினர் மற்றும் குழந்தைகளுடன் பொழுது போக்க நேரம் கிடைக்கிறது.

நான் நினைக்கும் இடங்களுக்கு சென்று வர முடிகிறது. குழந்தைகளின் பிறந்தநாள் விழாக்களிலும், பள்ளி ஆண்டு விழாக்களிலும் கலந்து கொள்ள முடிகிறது.

கிரிக்கெட் தவிர பைக் ரேஸ், டென்னிஸ், பேட்மின்டன், ஹாக்கி உட்பட அனைத்து விளையாட்டுகளும் எனக்கு பிடிக்கும். மாணவ, மாணவிகள் தங்களது தோல்விகளை பற்றி கவலைப்படாமல் கடின உழைப்பும், கடவுள் நம்பிக்கையும் கொண்டிருந்தால் நிச்சயம் வெற்றி பெறலாம் என்றார்.